## செய்தி வெளியீடு

## இராணிப்பேட்டை சிப்காட் வளாகத்தில் புதிய கார் தொழிற்சாலை தொழிற்சாலை அமைக்க தேவையான நில ஒதுக்கீட்டு ஆணையை மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

இராணிப்பேட்டை சிப்காட் வளாகத்தில் 260 ஏக்கர் நிலப்பரப்பில் பொறியியல் துறைச் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் பவினா கார்ஸ் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனம் ரூபாய் 300 கோடி செலவில் மின்சாரக் கார் தயாரிக்க உள்ளது. இந்த கார் தொழிற்சாலையில் 1500 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. இந்நிறுவனம் வருடத்திற்கு 25000 கார்களை தயாரிக்க அனுமதி பெற்றுள்ளது.

இந்த மின்சாரக் கார் உலகின் தலைச் சிறந்த முன்னணி நிறுவனங்களின் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்படவுள்ளது. வருகின்ற ஜனவரி 2011ல் வணிக ரீதியாக கார் உற்பத்தியைத் துவங்கவுள்ளது. பேட்டரி மூலம் இயங்கும் இந்த கார் ஐந்து இருக்கைகளுடன் அமையவுள்ளது. மேலும் இதில் உள்ள சிறப்பம்சமானது இந்த கார் ஓடும்போது அதன் பேட்டரி தன்னைத்தானே செரிவூட்டும் (On line recharge) தொழில் நுட்பம் கொண்டது.

இந்த புதியக் கார் தொழிற்சாலை அமைக்கத் தேவையான 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யும் ஆணையை, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பவினா கார் நிறுவனத்தின் தலைவர் திரு. ராஜசேகரிடம் இன்று (10.7.2009) வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது மாதிரிக் காரை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறிது தூரம் இயக்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.எம்.எப். பரூக்கி, சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு. கே. தீனபந்து, துணை முதலமைச்சரின் துணைச் செயலாளர் திரு. க. ரகுபதி ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.